**<u>தமிழ் நாடு மாநில ஹஜ் குழு</u>**

**<u>பத்திரிகை வெளியீடு – எண் 537 நாள் 26.8.2009</u>**

ஹஜ்ஜிற்காக சவூதி அரேபியாவிற்கு செல்லவிருக்கும் சமயங்களில் பன்றிக் காய்ச்சல் பரவும் அபாயத்தைக் கருத்திற்கொண்டு 65 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 12 வயதிற்குட்பபட்ட பயணிகளை சவூதி அரேபிய அரசு தடை செய்யவிருப்பதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இந்நேர்வினை மத்திய ஹஜ் குழுவிடம் தமிழ் நாடு மாநில ஹஜ் குழு எடுத்துரைத்து தெளிவுரைகள் கோரியது. ஹஜ் 2009-ற்காக வயது/பாலினம் குறித்து எவ்வித தடையும் பிறப்பிக்கப்படவில்லை என்று சவூதி அரேபிய அரசின் வெளிவிவகாரத்துறை அமைச்சகத்திடமிருந்து தகவல்கள் வந்துள்ளதாக மத்திய ஹஜ் குழு தற்போது தெரிவித்துள்ளது. மேலும் கீழ்க்காணும் இனங்கள் குறித்து அறிவுரைகள் அளிக்கப்பட்டுள்ளன:-

(அ) இவ்வாண்டில் ஹஜ் பயணம் மேற்கொள்வோர் பருவகால ஃப்ளு ஜுரத்திற்கெதிரான (seasonal flu) தடுப்பூசி போட்டதற்கான தகுந்த தடுப்பூசி சான்றிதழை ஹஜ் விசா பெறுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(ஆ) இவ்வாண்டில் ஹஜ் பயணம் மேற்கொள்வோர் (H1N1) ஃப்ளு ஜுரத்திற்கான தடுப்பூசி மருந்து எங்கும் கிடைக்கும்பட்சத்தில் அதனைப் போட்டதற்கான தகுந்த தடுப்பூசி சான்றிதழை ஹஜ் விசா பெறுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(இ) நாட்பட்ட மற்றும் தீராத நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் இவ்வாண்டில் தங்களுக்கான ஹஜ் மற்றும் உம்ரா பயணத்தை அவரவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு தள்ளிப் போடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து ஹஜ் பயணிகளும் இத்தெளிவுரைகளைக் கருத்திற்கொள்ளுமாறும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கா. அலாவுதீன், இ.ஆ.ப.,**
**உறுப்பினர் (ம) செயல் அலுவலர்.**

வெளியீடு – **இயக்குநர், செய்தித்துறை, சென்னை 9**